## 44. அம்பலப்புளியின் கதை

முகமதியர்களுடைய ஆட்சியும் ஆரவாரமுந் தமிழ்நாட்டில் தலைவிரித்தாடியது. மதவெறி கொண்டவர்கள் கோவில்களில் நுழைந்து கொள்ளையிட்டார்கள். தில்லை வாழந்தணர்கள் கூத்தப் பிரானுடைய திருவுருவத்திற்கு ஏதேனும் தொல்லையேற்படக்கூடும் என்றுஅஞ்சினார்கள். முகமதியர்களுடைய கலகம் அடங்கும் வரையிலும் கூத்தப் பிரானை



எங்கேனுங் கொண்டுபோய் ஒளித்து வைப்ப தென்று முடிவு செய்தார்கள். கூத்தப் பிரானையெடுத்துக் கொண்டு மேற்கு நோக்கிச்சென்றார்கள். ஓர் ஊரில் பல பெரிய புளிய மரங்கள் இருந்தன. அந்தணர்கள் பொந்து ஒன்றில் கூத்தப் பிரானைவைத்து மூடிவிட்டார்கள். இவ்வுண்மையை உணர்ந்த ஓரன்பர் அம்மரத்திற்குப் பூசை போட்டதோடுஅம்மரத்திற்கு அம்பலப்புளி என்று பெய ருங்கொடுத்துவிட்டார். நாளடைவில் பொந்து அடை பட்டுக்கூத்தப்பிரான் இருக்கும் அடையாளமே தெரியாமற் போய்விட்டது. தில்லை வாழந்தணர்கள் நாட்டிலே கலகம்முதலியன அடங்கியபின் கூத்தப்பிரானை எடுத்து வரச் சென்றார்கள். வைத்த மரத்தின் அடையாளந் தெரியாமற்போய்விட்டது. மயங்கியவர்களாய் அங்கு நின்று கொண் டிருந்தார்கள்.உழவர்கள் ஏர் அவிழ்த்ததும் மாட்டைஅம் பலப்புளியிடம் கட்டுவோமென்று பேசிக்கொண்டார்கள். இதிலிருந்து தில்லை வாழந்தணர்கள் கூத்தப்பிரானைக் கண்டுபிடித்துத் தில்லைக்குக் கொண்டுவந்து சேர்ந்தார்கள். "தெளிவந் தயன்மா லறியாத தில்லைப் பதியம்பலம் வாணர் புளியம் பொந்தி னிடம்வாழும்புதுமை காட்டிப் பொருள் (காட்டி எளிதிற் புளியங் குடியா னென்றிசைக்கும் பெருமை.

(ஏருழவர்...' (சோழமண்டல சதகம்)

[கூத்தப்பிரான்]